## மெட்ரோ ரெயில் பணிகள் முடிந்ததால்

# அண்ணாசாலையில் மீண்டும் பழைய முறையில் போக்குவரத்து மாற்றம்

சென்னை, ஜூலை.30–

சென்னை பெருநகர காவல் போக்குவரத்து தெற்கு மாவட்ட எல்லைக்குட்பட்ட நந்தனம்–அண்ணாசாலை சந்திப்பில் கடந்த 2011–ம் ஆண்டு தொடங்கப்பட்ட சென்னை மெட்ரோ ரெயில் பணிகளை முன்னிட்டு போக்குவரத்து ஒரு வழிப்பாதையாக மாற்றப்பட்டது. தற்போது அந்த பணிகள் முடிவடைந்த காரணத்தால் 2011–ம் ஆண்டு இருந்ததை போல போக்குவரத்தை மாற்றி அமைக்க திட்டமிடப்பட்டது. இதற்காக கடந்த 27–ந் தேதி சோதனை முறையில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டது. இது மக்களிடையே வரவேற்பை பெற்றதால், மீண்டும் பழைய போக்குவரத்து முறை அமல்படுத்தப்படுகிறது. சோதனை முறை போக்குவரத்து மாற்றம் தொடரும்.

இதன்படி, அண்ணாசாலையில் சைதாப்பேட்டையில் இருந்து தேனாம்பேட்டை நோக்கி செல்லும் அனைத்து வாகனங்களும் நந்தனம் சந்திப்பில் நேரே செல்லவும், இடதுபுறம் திரும்பி வெங்கட் நாராயணா சாலை வழியாகவும், வலதுபுறம் திரும்பி சேமியர் சாலை வழியாக செல்லவும் அனுமதி வழங்கப்படுகிறது. அண்ணா சாலை தேனாம்பேட்டையில் இருந்து சைதாப்பேட்டை வரும் அனைத்து வாகனங்களும் வழக்கம் போல் செல்ல அனுமதிக்கப்படுகிறது.

சேமியர் சாலையில் இருந்து வரும் வாகனங்கள் நந்தனம் சந்திப்பில் இடதுபுறம் திரும்பி சைதாப்பேட்டை நோக்கி செல்லவும், வலது புறம் திரும்பி அண்ணாசாலைக்கு செல்லவும், நேரே வெங்கட் நாராயணா சாலைக்கு செல்லவும் அனுமதிக்கப்படுகிறது. வெங்கட் நாராயணா சாலையில் இருந்து வரும் வாகனங்கள் நந்தனம் சந்திப்பில் இருந்து இடது புறம் திரும்பி அண்ணா சாலைக்கும், வலது புறம் திரும்பி சைதாப்பேட்டை நோக்கி செல்லவும் மற்றும் நேராக சேமியர் சாலை செல்லவும் அனுமதிக்கப்படுகிறது.

சென்னை பெருநகர காவல் கூடுதல் ஆணையர் (போக்குவரத்து) வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.